بِسۡمِ اللّٰهِ الرَّحۡمٰنِ الرَّحِيۡمِ

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் 26/11/2021 அன்று U.K - இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்**

## ஹஸ்ரத் உமர் பின் கத்தாப் (ரலி) அவர்களைப் பற்றிய நற்குறிப்பு

أَشۡهَدُ أَنۡ لَّاۤ إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحۡدَهٗ لَا شَرِيۡكَ لَهٗ وَأَشۡهَدُ أَنَّ مُحَمَّدًا عَبۡدُهٗ وَرَسُوۡلُهٗ۔ أَمَّا بَعۡدُ فَأَعُوۡذُ بِاللّٰهِ مِنَ الشَّيۡطٰنِ الرَّجِيۡمِ۔

بِسۡمِ اللّٰهِ الرَّحۡمٰنِ الرَّحِيۡمِ ﴿۱﴾ اَلۡحَمۡدُ لِلّٰهِ رَبِّ الۡعٰلَمِيۡنَ ﴿۲﴾ الرَّحۡمٰنِ الرَّحِيۡمِ ﴿۳﴾ مٰلِكِ يَوۡمِ الدِّيۡنِ ﴿۴﴾ اِيَّاكَ نَعۡبُدُ وَاِيَّاكَ نَسۡتَعِيۡنُ ﴿۵﴾

اِهۡدِنَا الصِّرَاطَ الۡمُسۡتَقِيۡمَ ﴿۶﴾ صِرَاطَ الَّذِيۡنَ اَنۡعَمۡتَ عَلَيۡهِمۡ ۙ غَيۡرِ الۡمَغۡضُوۡبِ عَلَيۡهِمۡ وَلَا الضَّآلِّيۡنَ ﴿۷﴾

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் அவையில் திருக்குர்ஆன் ஞானமுடையவர்களுக்குப் பெரும் அந்தஸ்து இருந்தது. அவர்கள் இளைஞர்களாக இருந்தாலும் சரி! பெரியவர்களாக இருந்தாலும் சரி! ஹுர் பின் கைஸ் என்பவர் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுக்கு அருகில் அமரக் கூடியவர்களுள் ஒருவராக இருந்தார்கள். உயய்னா பின் ஹிஸ்ன் பின் ஹுஸைஃபா என்பவர் தமது சகோதரரின் மகனாகிய ஹுர் பின் கைஸ் உடைய பரிந்துரையுடன் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் சபையில் ஆஜராகி ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களைப் பார்த்து, தாங்கள் நீதியுடன் எங்களுக்குப் பொருள்களைக் கொடுப்பதில்லை! என்று கூறினார். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கோபமடைந்து ஏதோ கூற வந்த போது, ஹுர் பின் கைஸ் அவர்கள் உடனே அன்னாரைப் பார்த்து, அல்லாஹ் தனது நபி (ஸல்) அவர்களிடம் خُذِ الۡعَفۡوَ وَاۡمُرۡ بِالۡعُرۡفِ وَاَعۡرِضۡ عَنِ الۡجٰهِلِيۡنَ - "நபியே! எப்போதும் மன்னிப்பைக் கடைபிடிப்பீராக. நன்மைக்கான கட்டளையைக் கொடுப்பீராக. அறிவற்றவர்களை விட்டு முகந்திருப்புவீராக." என்று கூறியுள்ளான்; இந்த உயய்னா அறிவற்றவர்களைச் சார்ந்தவர் ஆவார் என்று கூறினார். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அப்போது ஒன்றும் பேசாமல் அமைதியாகி விட்டார்கள். ஏனென்றால் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அல்லாஹ்வின் வேதத்தைக் கேட்டு அமைதியாகி விடுவார்கள்.

**ஹஸ்ரத் முதலாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் இது தொடர்பாக கூறுகிறார்கள்:** ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் ஒரு செல்வந்தருக்கு தண்டனை கொடுப்பதற்காக மரண தண்டனையை நிறைவேற்றுபவரை அழைத்தார்கள். அப்போது பத்து வயதான ஒரு சிறுவன், وَ الۡكٰظِمِيۡنَ الۡغَيۡظَ (இறையச்சத்தையுடையவர்கள் கோபத்தை அடக்குவார்கள்) وَاَعۡرِضۡ عَنِ الۡجٰهِلِيۡنَ هٰذَا مِنَ الۡجَاهِلِيۡنَ அறிவற்றவர்களை விட்டு முகந்திருப்புவீராக. இவர் அறிவற்றவர்களைச் சார்ந்தவர் ஆவார் என்று கூறினான். இதைக் கேட்டவுடன் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் முக(த்திலிருந்து கோப)ம் மாறி, அன்னார் அமைதியாகி விட்டார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் குழந்தைகளின் ஒழுக்கப் பயிற்சி மற்றும் அவர்களின் புத்திகளைக் கூர்மையாக்க தமது சபையில் அவர்களையும் அழைப்பார்கள்; அவர்களிடமிருந்து ஆலோசனை கேட்பார்கள்.

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் பைத்துல் மாலின் செல்வத்தைப் பாதுகாப்பதிலும் கண்காணிப்பதிலும் மிகுந்த அக்கறையுள்ளவர்களாக இருந்தார்கள். ஒரு முறை ஒருவர் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுக்கு ஒரு டம்ளரில் பால் கொடுத்தார். அன்னார் அதைக்

குடித்தார்கள். இது எங்கிருந்து வந்தது? என்று கேட்டார்கள். இது ஸக்காத் ஒட்டகங்களின் பால் ஆகும் என கூறப்பட்டது. ஸக்காத் (ஒட்டகத்)தின் பாலை நான் குடிக்க மாட்டேன் என்று மறுத்தவாறு வாயின் உள்ளே கை இட்டு வாந்தியெடுத்து அதை வெளியேற்றி விட்டார்கள்.

ஒரு முறை அன்னாருடைய நோயுக்கு மருந்தாக தேன் உட்கொள்ளுமாறு பரிந்துரை செய்யப்பட்டது. அப்போது பைத்துல் மாலில் தேன் இருந்தது. ஆனால் அன்னாரோ மக்களிடம் அனுமதி கோராமல் அதை எடுப்பதை ஹராமாகக் கருதினார்கள்.

ஒரு மதிய வேளையில் கடும் வெப்பத்தில் பின் தங்கிவிட்ட இரு ஒட்டகங்களை அவை காணாமல் போய் விடக் கூடாது என்பதற்காக மேயுமிடத்திற்குத் தாமே அதை ஓட்டிச் சென்றார்கள். ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களிடம் இது எனது பணியாகும்; நானே இதை செய்வேன் என்றார்கள்.

**ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:** அல்லாஹ், முஸ்லிம்களுக்கு செல்வத்தைக் கொடுத்தான்; பொருள்களைக் கொடுத்தான்; கண்ணியத்தைக் கொடுத்தான்; அந்தஸ்தைக் கொடுத்தான். ஆனால் அவர்கள் இஸ்லாமிய போதனையை விட்டு கவனமற்றவர்களாக இருக்கவில்லை.

சயீது பின் முஸய்யப் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: ஒரு யூதருக்கும் முஸ்லிமுக்கும் ஏற்பட்ட சண்டையில் யூதர் உண்மையில் இருந்ததன் காரணமாக ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அதற்கேற்ப தீர்ப்பு வழங்கினார்கள்.

ஹஸ்ரத் அனஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: ஹஸ்ரத் அம்ர் பின் ஆஸ் (ரலி) அவர்களின் மகன் எகிப்தைச் சார்ந்த ஒரு நபர் ஓட்டப் பந்தயத்தில் அவரை முந்திச் சென்றதன் காரணமாக சவுக்கால் அடித்தார். ஆகவே ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அதே எகிப்து நபரின் மூலமாக ஹஸ்ரத் அம்ர் பின் ஆஸ் (ரலி) அவர்களின் மகனுக்கு சவுக்கடி கொடுக்கச் செய்தார்கள்.

ஒரு அறிவிப்பில் வருகிறது. ஒரு மனிதர் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களைப் பார்த்து, உங்களிடத்தில் நாங்கள் கோணல் தன்மையைக் கண்டால் அதை எங்களது வாளைக் கொண்டு நேராக்குவோம் என்று கூறினார். இந்த சமுதாயத்தில் இவ்வாறான நபர்களும் இருக்கிறார்கள் என ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்தினார்கள்.

ஒரு சந்தர்ப்பத்தில் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள்: எனக்கு மிகவும் விருப்பத்திற்குரியவர் என்னுடைய குறைகளைக் குறித்து என்னிடம் தெரிவிப்பவராவார்.

‘‘நான் தவறு செய்தால் என் மீது உள்ள பயத்தின் காரணமாக எவரும் எனக்கு நேர்வழி காட்டாமல் இருந்து விடுவார்களோ என்ற அச்சம் எனக்கு உள்ளது’’ என்ற ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் கூற்று ஒன்றும் எடுத்துரைக்கப்படுகிறது.

ஒரு முறை ஒருவர் மக்கள் கூட்டத்திற்கு முன்னால் அன்னாரைப் பார்த்து, உமரே! அல்லாஹ்வுக்கு அஞ்சிக்கொள்ளுங்கள் என்று கூறினார். சிலர் அந்நபரின் பேச்சைக் கேட்டு கடும் கோபம் கொண்டனர். அவரை மௌனமாக்க விரும்பினர். அதற்கு ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அந்நபரிடம், நீங்கள் குறையைக் கூறவில்லை என்றால் உங்களிடம் நன்மை எதுவுமில்லை; நாங்கள் அதை செவியேற்கவில்லை என்றால் எங்களிடம் நன்மை எதுவுமில்லை என்று கூறினார்கள். அதாவது, வெறும் பேச்சை மட்டும் பேச வேண்டாம். என்ன விஷயம் என்று குறிப்பிட்டு கூறுங்கள் என்றார்கள்.

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் மார்க்க விவகாரங்களில் மிகவும் அதிகமாக இஸ்லாமிய போதனையைக் கருத்தில் கொண்டு வந்தார்கள். ‘இஸ்லாத்தை ஏற்றுக்

கொண்டால் முஸ்லிம்களுக்கு இருக்கும் அதே உரிமைகளும் கடமைகளும் உங்களுக்கும் இருக்கும். இல்லை என்றால் எவர் தனது மார்க்கத்தில் இருக்க விரும்புகிறாரோ அவர் மீது ஜிஸ்யா விதிக்கப்படும்' என்று அலெக்ஸாண்ட்ரியா வெற்றிக்குப் பிறகு (அறிவிக்கப்பட்டு) போர் கைதிகளுக்கு முழுமையான சுதந்திரம் அளிக்கப்பட்டது. இதனால் பல கைதிகள் முஸ்லிம்களானார்கள்.

மரணத்தை நெருங்கிக்கொண்டிருந்த, உதவியை நாடிய ஒரு கிறிஸ்தவ மூதாட்டிக்கு இஸ்லாத்தின் பக்கம் அழைப்பு விடுத்தார்கள். அந்த மூதாட்டியின் கட்டாய சூழ்நிலை அவளை முஸ்லிமாக ஆக்குவதற்குக் காரணமாக ஆகிவிடக் கூடாதே என பிறகு ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அல்லாஹ்விடம் பாவ மன்னிப்பு கோரினார்கள்.

அஷக் என்ற தன்னுடைய கிறிஸ்தவ அடிமையை முஸ்லிமாக ஆகுமாறு கூறியபோது, அவன் மறுத்து விட்டான். அப்போது அன்னார் لَآ اِكْرَاهَ فِي الدِّيْنِ மார்க்கத்தில் எவ்வித பலவந்தமும் இல்லை என்று கூறினார்கள். அத்துடன் தம் மரணத்திற்கு முன்பு அந்த அடிமையை விடுதலை செய்து விட்டார்கள்.

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் விலங்குகளின் மீதும் மிகுந்த பரிவு காட்டினார்கள். ஓர் ஒட்டகத்தின் முதுகில் காயத்தைக் கண்ட போது, உன்னைப் பற்றி அல்லாஹ்வின் விசாரணையைக் குறித்து அஞ்சுகிறேன் என்று கூறினார்கள்.

ஒரு முறை ஓர் அடிமை ஒரு பயண விலங்கை நான்கு மைல் ஓடச் செய்து மீன் வாங்கி வந்தான். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அந்தப் பயண விலங்கின் வியர்வையைக் கண்டு, எனக்காக ஓர் உயிரினம் துன்பத்தில் ஆழ்த்தப்பட்டது எனக் கூறி அந்த மீனை உண்ண மறுத்து விட்டார்கள்.

**ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:** ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களிடம் ஒரு யூதர், திருக்குர்ஆனில் ஒரு வசனம் உள்ளது. அது எங்களுடைய வேதத்தில் இறங்கி இருந்தால் நாங்கள் அந்நாளை பெருநாளாகக் கொண்டாடி இருப்போம் என்று கூறினார். அது எந்த வசனம் என்று ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கேட்டார்கள். அது اَلْيَوْمَ اَكْمَلْتُ لَكُمْ دِيْنَكُمْ என்ற வசனமாகும் என்று அவர் கூறினார். அதைக் கேட்ட ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள், அது எங்களுக்கு இரண்டு பெருநாள்களைக் கொண்ட நாள் ஆகும் என்று கூறினார்கள். அதாவது, அந்த வசனம் இறங்கிய நாள் ஜுமுஆ நாளாகவும் இருந்தது; அரஃபா தினமாகவும் இருந்தது.

சில சான்றோர்கள் கூறுகிறார்கள்: மக்கள் ஏதேனும் விவகாரத்தில் கருத்து வேறுபாடு கொண்டால், ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அந்த விவகாரத்தில் என்ன செய்தார்கள் என பாருங்கள்! ஏனென்றால் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் ஆலோசனையின்றி எந்த வேலையையும் செய்ய மாட்டார்கள்.

ஹஸ்ரத் கபீஸா பின் ஜாபிர் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களை விட அதிகமாக அல்லாஹ்வின் வேதத்தை ஓதக் கூடியவர், அல்லாஹ்வின் மார்க்கத்தை புரிந்தவர், அவற்றை தர்ஸ்களில் எடுத்துரைப்பவர் எவரையும் நான் காணவில்லை!

ஹஸ்ரத் ஹஸன் பஸ்ரி (ரஹி) அவர்கள் கூறுகிறார்கள்: நீங்கள் உங்கள் சபையை நறுமணமிக்கதாக ஆக்க விரும்பினால் அதில் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களைப் பற்றி அதிகம் பேசுங்கள்.

முஜாஹித் என்பவரிடமிருந்து அறிவிக்கப்படுகிறது: ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் காலகட்டத்தில் ஷைத்தான்கள் விலங்கிடப்பட்டிருந்தனர். அன்னார் ஷஹீதானபோது ஷைத்தான்கள் பூமியில் குதிக்க ஆரம்பித்தனர்.

அலீ முஹம்மது ஸலாபி எழுதுகிறார்கள்: ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் இஸ்லாமிய தனிச்சிறப்புகளை பிரதிபலிக்கக் கூடிய கவிதைகளை விரும்பி வந்தார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அன்பை வெளிப்படுத்தும் கவிதைகளில் நல்ல பெண்மணிகளின் பெயர்களைக் குறிப்பிடும் சம்பிரதாயத்தை ஒழித்தார்கள். அதற்கு கடும் தண்டனையை நிர்ணயித்தார்கள்.

**ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் மேன்மைகள், சிறப்புகள் குறித்து ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:** சில முன்னறிவிப்புச் சம்பவங்கள் ஒரு முறை மட்டுமே நிறைவேறும் என எதிர்பார்க்கப்பட்ட நிலையில் அவை படிப்படியாகவோ அல்லது இன்னொரு நபருக்காகவோ வெளிப்பட்டன. உதாரணமாக நம்முடைய நபி (ஸல்) அவர்களின் முன்னறிவிப்பு என்னவென்றால், சீஸர் மற்றும் கிஸ்ரா ஆகியோரின் கருவூலங்களின் திறவுகோல்கள் அன்னாருடைய கைகளில் வைக்கப்பட்டன என்பதாகும். முன்னறிவிப்பு வெளிப்படுவதற்கு முன்பே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மரணமடைந்து விட்டார்கள் என்பது வெளிப்படை. அன்னார் (ஸல்) அவர்களோ சீஸர் மற்றும் கிஸ்ரா ஆகியோரின் கருவூலங்களையும் பார்க்கவில்லை; திறவுகோல்களையும் பார்க்கவில்லை. அந்தத் திறவுகோல்கள் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுக்குக் கிடைக்க வேண்டும் என்று விதிக்கப்பட்டிருந்தது. ஏனெனில் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் இருப்பு, நிழல் ரீதியாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் இருப்பாகவே இருந்தது. ஆகவே இறைஅறிவிப்பின் உலகில் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் கை, இறைத்தூதர் (ஸல்) அவர்களின் கையாக ஆக்கப்பட்டிருந்தது.

**பிறகு, ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:** ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) மற்றும் ஹஸ்ரத் உமர் (ரலி) மற்றும் துன்னூரைன் - இரு ஒளிகளையுடையவர் (அதாவது ஹஸ்ரத் உஸ்மான் ரலி....) ஆகியோரை, இஸ்லாத்தின் வாசலாகவும் படைப்பினங்களில் சிறந்தவராகிய முஹம்மது ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் முன்னணிப்படையாகவும் அல்லாஹ் இவர்களை ஆக்கியுள்ளான். ஆகவே எவர் இவர்களின் மேன்மையை மறுப்பரோ அவருடைய தீய முடிவைக் குறித்தும் அவருடைய ஈமான் வீணாவதைக் குறித்தும் நான் அஞ்சுகிறேன். நேர்வழி பெற்ற கலீஃபாக்கள் சந்தேகத்திற்கிடமின்றி ஹஸ்ரத் கைருல் அன்பியா - நபிமார்களில் சிறந்தவராகிய முஹம்மது (ஸல்) அவர்களை பின்பற்றுவதில் மிகப்பெரும் அந்தஸ்தை அடைந்திருந்தனர். உலகில் வேறு எவருக்கும் வழங்காதவற்றையெல்லாம் அல்லாஹ் அவர்களுக்கு வழங்கினான்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:** ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அல்லது உமர் ஃபாரூக் (ரலி) அவர்கள், அலீ முர்தஸா (ரலி) அல்லது ஃபாத்திமதுஸ் ஸுஹ்ரா (ரலி) அவர்களின் உரிமைகளைப் பறித்துக் கொண்டனர்; அவர்களின் மீது அநீதி இழைத்தனர் என்று கருதக்கூடிய ஷீஆ (பிரி)வைச் சார்ந்த அவர்கள் - நீதியை விட்டு விட்டார்கள்; அநீதியை விரும்பி விட்டார்கள்; அநீதியாளர்களின் வழியைத் தேர்ந்தெடுத்துக் கொண்டார்கள். உண்மை என்னவென்றால், ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) மற்றும் உமர் ஃபாரூக் (ரலி) ஆகிய இருவரும் உரிமைகளை செலுத்துவதில் ஒருபோதும் கவனமற்றவர்களாக இருக்கவில்லை. அவர்கள் இறையச்சத்தை தமது வழியாகவும், நீதியை தமது குறிக்கோளாகவும் கொண்டு விட்டார்கள். மேலும் தமது ஆன்மாவை அல்லாஹ்வுக்குக் கட்டுப்படுவதில் ஈடுபடுத்தி இருந்தார்கள். மிகுதியான அருள் மற்றும் ஈருலக நபியின் மார்க்கத்தின் உதவிக்காக அபூபக்ர் மற்றும் உமர் (ரலியல்லாஹு அன்ஹுமா) ஆகியோர் ஈடுபட்டதைப் போன்று நான் எவரையும் காணவில்லை. அபூபக்ர் (ரலி) மற்றும் உமர் (ரலி) ஆகியோரின் உண்மை மற்றும் கலப்பற்ற தன்மையின் மேன்மை எந்த அளவு உயர்ந்ததாக இருக்கிறது! அவ்விருவரும் எவ்வாறான அருளுக்குரிய அடக்கஸ்தலத்தில் அடக்கம்

செய்யப்பட்டுள்ளனர் என்றால், மூஸா (அலை) அவர்களும் ஈஸா (அலை) அவர்களும் உயிருடன் இருந்திருந்தால் எண்ணிக்கையிலடங்கா பொறாமையுடன் அங்கு அடக்கம் செய்யப்பட வேண்டும் என ஆவல் கொண்டிருப்பர். ஆனால் இது கண்ணியத்திற்குரிய இறை சந்நிதானத்தின் சார்பாக வழங்கப்படும் நிலையான அருள் ஆகும். எவர்களின் பக்கம் ஆரம்பம் முதல் இறை அருள் கவனம் கொண்டுள்ளதோ அவர்களை மட்டும் நோக்கியே அது செல்கிறது. இவ்வாறான மக்களைத்தான் இறுதியில் அல்லாஹ்வின் அருளின் போர்வை மூடிக் கொள்கிறது.''

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:** ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்குப் பிறகு இம்மூவரின் மூலமாகவே இஸ்லாம் நிலைபெற்றது. ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் மேற்கொண்ட நடவடிக்கை எவ்விதத்திலும் குறைந்ததல்ல என்றாலும் வெற்றியின் பாதையை சித்தீக்கே அக்பர் (ரலி) அவர்கள்தான் அமைத்தார்கள். சித்தீக் (ரலி) அவர்கள் பாதையை சீரமைத்தார்கள்; பிறகு அதில் உமர் (ரலி) அவர்கள் வெற்றிகளின் கதவுகளைத் திறந்தார்கள்.

**ஹஸ்ரத் மவ்லவி அப்துல் கரீம் சாஹிப் (ரலி) அவர்கள் எழுதுகிறார்கள்:** ஒரு முறை ஒரு நண்பர் ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களின் சமூகத்தில் ஆஜராகி, ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) மற்றும் ஹஸ்ரத் உமர் (ரலி) ஆகியோரை விட உங்களை அந்தஸ்த்தில் சிறந்தவராகவும், தங்களை ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு மிக நெருக்கமானவராகவும் நாங்கள் ஏன் கருதக்கூடாது என்று கேட்டார். இதைக் கேட்டு ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களின் நிறம் மாறிவிட்டது. அன்னாரிடத்தில் ஒரு வினோதமான நிம்மதியின்மையும் கலக்கமும் தென்பட்டது. ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் மேன்மைகள் சிறப்புகள், அன்னாருக்கு தான் அடிமையாக இருக்கும் நிலை, தன் தாழ்ந்த நிலை மற்றும் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) மற்றும் ஹஸ்ரத் உமர் (ரலி) ஆகியோரின் சிறப்புகள் ஆகியவற்றைக் குறித்து அன்னார் முழுமையாக ஆறு மணி நேரங்கள் எடுத்துரைத்தவாறு, நான் அவர்களைப் புகழக் கூடியவனாகவும் அவர்களின் கால் மண்ணாகவும் இருப்பதே எனக்குப் போதுமான பெருமை ஆகும். இறைவன் அவர்களுக்கு வழங்கிய மேன்மைகளை கியாமத் வரையிலும் யாராலும் பெற முடியாது. ஹஸ்ரத் முஹம்மது ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மீண்டும் இவ்வுலகில் எப்போது பிறப்பார்கள்! ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) மற்றும் ஹஸ்ரத் உமர் (ரலி) ஆகியோருக்குக் கிடைத்த தொண்டு செய்யும் அவ்வாறான வாய்ப்பு வேறு யாருக்கு கிடைக்கும்! என்று எடுத்துரைத்தார்கள்.

*ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் இறுதியில் கூறினார்கள்:* இந்த குத்பாக்களில் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் குறிப்பு இங்கு முடிவடைகிறது. இனி வரும் காலங்களில் அல்லாஹ் நற்பேறு வழங்கினால், ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் குறிப்பு ஆரம்பமாகும். இன்ஷா அல்லாஹ்!

اَلْحَمْدُ لِلّٰہِ نَحْمَدُہٗ وَنَسْتَعِیْنُہٗ وَنَسْتَغْفِرُہٗ وَنُؤْمِنُ بِہٖ وَنَتَوَکَّلُ عَلَیْہِ وَنَعُوْذُ بِاللّٰہِ مِنْ شُرُوْرِ اَنْفُسِنَا وَمِنْ سَیِّئَاتِ اَعْمَالِنَا مَنْ یَّھْدِہِ اللّٰہُ فَلَا مُضِلَّ لَہٗ

وَمَنْ یُّضْلِلْہُ فَلَا ھَادِیَ لَہٗ وَنَشْھَدُ اَنْ لَّآ اِلٰہَ اِلَّا اللّٰہُ وَنَشْھَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُہٗ وَرَسُوْلُہٗ، عِبَادَ اللّٰہِ رحمکم اللّٰہ اِنَّ اللّٰہَ یَاْمُرُ بِالْعَدْلِ وَالْاِحْسَانِ وَاِیْتَآءِ

ذِی الْقُرْبٰی وَیَنْھٰی عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْکَرِ وَالْبَغْیِ یَعِظُکُمْ لَعَلَّکُمْ تَذَکَّرُوْنَ اُذْکُرُوا اللّٰہَ یَذْکُرْکُمْ وَادْعُوْہُ یَسْتَجِبْ لَکُمْ وَلَذِکْرُ اللّٰہِ اَکْبَرُ۔

**(தமிழாக்கம்: மவ்லவி A.P.A. தாரிக் அஹமது)**